இயக்கவூர்தி விபத்து கோரிக்கை தீர்ப்பாயம், நாகப்பட்டினம்
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நாகப்பட்டினம்.
எம்.சி.ஒ.பி.எண்.13/2023 மசா.1

பெயர். திரு. மதியழகன் த/பெ.வள்ளிக்கண்ணு

கிராமம்.வெளிப்பாளையம்

நாள். 09.12.2024.

2024 –ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 09–ந் தேதி திங்கள் கிழமை Act X of 1973 ஆண்டின் சட்ட விதிப்படி திரு. G. கிருஷ்ணன், பி.ஏ., எல்.எல்.பி., தலைமை நீதித்துறை நடுவர், நாகப்பட்டினம், ஆகிய என் முன்னால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரண**.

சம்பவ சமயத்தில் நான் இரும்பு வியாபாரம் தொழில் செய்து வந்தேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த கடந்த 06.04.2022ம் தேதி நான் வாங்கிய இரும்புகளை நான் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தில் வைத்துக்கொண்டு வீட்டிற்கு செல்லும் பொழுது இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். கிழக்கு கடற்கரை சாலையில் நான் மேற்கிலிருந்து கிழக்காக கடக்கும்போது இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். எனக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளது என்பதை காட்ட நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். விபத்து நடந்தவுடன் அக்கம் பக்கம் இருந்தவர்கள்தான் 108 ஆம்புலன்ஸ் மூலம் நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு என்னை கொண்டுபோய் சேர்த்தார்கள் என்று சொன்னால் சரிதான். நான் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பின்னர்தான் தகவல் அறிந்து எனது வீட்டாரும், எனது ஊரை சார்ந்தவர்களும் மேற்படி மருத்துவமனைக்கு வந்து என்னை பார்த்தார்கள். அப்போதுதான் நான் அவர்களிடம் விபத்து சம்மந்மாக தகவல் சொன்னேன். நான் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தபோது விபத்து நடந்த நேரத்தை மாற்றி சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் ஓட்டி சென்ற டி.வி.எஸ். எக்ஸ்.எல் இருக்கரவாகனமானது இரும்பு சாமான்களை ஏற்றி செல்வதற்கான வாகனம் இல்லை என்றும், அதனால் நான் சாலை விதிகளை பின் பற்றாமல் இருசக்கர வாகனத்தில் இரும்பு சாமான்களை ஏற்றிக்கொண்டு சென்றதால் விபத்திற்கு காரணமாக இருந்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயங்களுக்காக நான் ரூ.5 லட்சத்தினை மருத்துவ செலவாக செய்தேன் என்பதை காட்ட எந்தவித மருத்துவ ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கான சிகிச்சை அனைத்தும் நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் மேற்கொண்டதால் நான் மனுவில் சொல்லப்பட்டுள்ளது

போல எனக்கு மருத்துவ செலவாக ரூ.5 லட்சம் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வீட்டு தரகராகவும், மீன் வியாபாரமும், இரும்பு வியாபாரத்துடன் சேர்ந்து செய்துவந்தேன் என்றும் அதனால் எனக்கு மாத வருமானமாக ரூ.75 ஆயிரம் வந்தது என்றும் அதிகப்படியான இழப்பீடு பெறவேண்டி தவறாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்து சம்மந்தமாக சேதமடைந்த எனது இருசக்கர வாகனத்தை பதிவு சான்றிதழுடன் மோட்டார் வாகன ஆய்விற்கு காவல்துறை மூலம் ஆஜர் செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். அதற்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கையை பெற்று தாக்கல் செய்யவில்லை. விபத்து சமயத்தில் நான் ஓட்டி சென்ற வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கையை தாக்கல் செய்தால் விபத்தானது யாரின் அஜாக்கிரதையால் ஏற்பட்டது என தெரிந்துவிடும் என்பதற்காக, அந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் மாதம் ரூ.75 ஆயிரம் சம்பாதித்து வந்தேன் என்பதை காட்ட வங்கி கணக்குபட்டியல் உட்பட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எதிர்மனுதாரர் உரிய ஓட்டுனர் உரிமத்துடனும் சாலை விதிகளை பின் பற்றி வாகனத்தை ஓட்டி வந்தார் என்றும் விபத்தானது எனது அஜாக்கிரதையால்தான் ஏற்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. நான் மனுவில் கோரியுள்ள இழப்பீடினை எதிர்மனுதாரர் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை என்பதால், இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**